Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

14

# பஞ்ச வாத்யங்கள்

**Dr.மு.ம.சியாமள வள்ளி**
**குரலிசை விரிவுரையாளர்,**
**ராணி லேடி மெய்யம்மை ஆச்சி தமிழ் இசைக்கல்லூரி மதுரை.**
**Email: shyamala.sangeetham@gmail.com**

**ஆய்வுச்சுருக்கம் :**

இறைவனுக்காக கோயில்களில் வாசிக்கப்படும் ஐந்து வகையான வாத்யங்களே பஞ்சவாத்யங்கள் என்று அழைக்கப்படுகிறது. இவ்வாத்யங்கள் எவை என்பதையும் , எந்த ஊர்களில் மற்றும் எந்த ஸ்வாமிக்காக வாசிக்கப்படுகின்றன என்று இக்கட்டுரையில் காண்போம்.

**திறவுச் சொற்கள் :** இசைக்கருவிகள், கருவிகளின் அமைப்பு,ஊர்கள் தாளத்தின் காலம், ஸ்வாமி

**முன்னுரை :**

இதிகாச காலத்திலிருந்தே நரம்புக்கருவிகள் , தோற்கருவிகள், காற்றுக்கருவிகள் போன்றவை வழக்கத்திலிருந்தே வருகின்றன. மேலும் புராணங்களிலும் வாத்யங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவைகளில் முக்கியமானவை பஞ்சவாத்யங்கள் என்பதாகும். அவை,

- **கொம்பு**
- **திமிலை**
- **உடுக்கை**
- **மத்தளம்**
- **இந்தளம்**

இவற்றில் கொம்பு என்பது துளைக்கருவியாகும். மற்ற நான்கும் தாளக்கருவிகள் ஆகும். இவ்வாத்யங்கள் ஒன்றோடொன்று இணைந்து இசைக்கும் பொழுது கைலாசத்தில் சிவதாண்டவம் காண்பது போல் மனதில் தோன்றுகிறது. ஏனென்றால் துரித காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு மத்யம காலம் அதன் பிறகு திஸ்ரம் மற்றும் மேற்காலத்தில் வாசிக்கப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் பஞ்சவாத்தியங்களின் அமைப்பு மற்றும் அம்சங்களைக் கீழ்க்காண்போம்.

**பஞ்சவாத்யங்கள் :**

பஞ்சவாத்யங்கள் என்பது ஐந்து கருவிகள் இணைந்து வாசிப்பது ஆகும். அவை , **இடுக்கை (உடுக்கை), திமிலை, மத்தளம், இந்தளம், கொம்பு** என்பதாகும்.

இந்த ஐந்து வகையான வாத்தியக்குழு (Orchestra) சிவன், ஐயப்பன், மஹாவிஷ்ணு மற்றும் சக்தி கோயில்களில் திருவிழாக்களின் பொழுது வாசிக்கப்படுகின்றன. இவ்வாத்யங்கள் பழமையான நாட்டுப்புற இசைக் கருவிகளாகும்.

தத்தம் ச விதத்தம் சைவ
ஞானம் சுசூர மேவ ச
கானமானந்த ந்ருத்தம் ச
பஞ்சவாத்ய ப்ரவீனித

மேற்கூறிய நான்கு வரிகளும் பஞ்சவாத்யத்தையே குறிக்கின்றன.

இந்த ஐந்து கருவிகளில் ஒன்று காற்றுக்கருவி, மற்ற நான்கும் தோற்கருவியாகும்.

இதனுடைய இசை அமைப்பு பிரமிடு போன்ற ரிதம் அமைப்பைக் கொண்டுள்ளது. குறைந்தது 3 மணி நேரம் கச்சேரி நிகழ்த்தப்படுவதாக கூறப்படுகிறது. இக்குழுவில் 12 முதல் 54 பேர் வரை கலைஞர்களின் எண்ணிக்கைக் காணப்படுகின்றது. பஞ்சவாத்யக் குழுவில் நடுவில் திமிலையும் அதன் அருகில் இந்தாளம் மற்றும் இடக்கை இருவராகவும் , இருபக்கங்கள் திமிலை மற்றும் மத்தளத்துக்கு நடுவில் நின்று வாசிக்கின்றனர்.

**தாளகட்டமைப்புகள் :**

1,2 மற்றும் 3 காலங்கள் மெதுவாக தாள கட்டமைப்புக் கொண்டுள்ளது. இதற்கு **"பதி காலம்"** என்று கூறப்படும்.

4, 5 மற்றும் 6 காலங்கள் மத்திய தாளக் கட்டமைப்பை உடையது. இதற்கு **"மத்யம காலம்"** என்று பெயர்.

7, 8, 9 மற்றும் 10 காலங்கள் உச்ச தாளக் கட்டமைப்பை உடையது. இதற்கு **"திருத காலம்"** என்று கூறப்படும்.

பஞ்சவாத்யம் பதி காலத்தில் தொடங்கி த்ருத காலத்தின் இறுதியில் 'திமிலை' கருவிகள் எல்லாம் சேர்ந்து இலைத்தளம் உதவியுடன் 'வேகம்', 'ஒலி' 'திறமை' என்ற கூட்டு கலவையாக அமைகிறது.

ஆண்கள் மட்டுமல்லாமல் தற்பொழுது பெண்களும் பஞ்சவாத்தியக் கலைஞர்களாக உருவாகி வருகின்றனர்.

**பஞ்சவாத்தியக் கலைஞர்கள் :**

கொம்பு - திரு. செங்கமநாத் அப்பு நாயர்

திமிலை - அன்னமநாடா பரமேஸ்வர மாரார்(கலாமண்டலம்)

இவர் பஞ்சவாத்தியக் குழுவை வழிநடத்துபவராக இருக்கிறார். மேலும் கேரள சங்கீத நாடக அகாடமி ஃபெல்லோஷிப் மற்றும் கௌரவங்களைப் பெற்றவர்.

உடுக்கை - கலியமூர்த்தி பூசாரி

- கரிவேலில் ராதாகிருஷ்ணன்

மத்தளம் - கலாமண்டலம் ஹரிஹரன்

- திரு.கே.சங்கர வாரியர்

**வாத்தியத்தின் அமைப்பு:**

**கொம்பு :**

கொம்பு என்பது ஒரு காற்றுக் கருவியாகும். பண்டையக்கால தமிழர்களின் நாட்டுப்புற இசைக் கருவி ஆகும். இக்கருவி **S** என்ற வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. பழந்தமிழர்கள் விலங்குகளின் கொம்பு கொண்டும் , பின்னர் மூங்கிலாலும் , தற்பொழுது பித்தளை உலோகத்தாலும் கொம்பு செய்யப்படுகிறது. மேற்கூறியவற்றை விட வெண்கல வார்பினால் செய்தால் ஒலி அதிர்வு கூடுதலாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

இதனுடைய அளவு நான்கு முதல் ஆறு அடி வரை ஆகும். இதை வாசிக்கும் கலைஞர்கள் தங்களுடைய முழு திறனையும் பயன்படுத்தி வாசித்தால் யானை பிளிறுவது போன்று ஓசை கேட்கும் என்கிறார்கள். இக்கருவி சந்தோஷத்தையும், வெற்றியையும் குறிக்கும் ஒலியாக அமைகிறது.

(உ.ம்) அரசன் போரில் வெற்றி பெற்றால் கொம்பு முழக்கம் செய்வர்.

அரசன் மற்றும் ஸ்வாமி புறப்படும் போதும் கொம்பு வாத்தியம் வாசிக்கப்படுகின்றது.

**திமிலை :**

திமிலை என்பது தோற்கருவி ஆகும். பலா மரத்தால் செய்யப்பட்டு இரு பக்கமும் கன்றின் தோலினால் மூடப்பட்டு இருக்கும். மணற்கடிகார வடிவில் காணப்படுகிறது. பழந்தமிழர்களின் நூலான சிலப்பதிகாரத்தில் இசைக்கருவிகளின் பெயர்களில் திமிலையும் இடம்பெறுகின்றன.

பெரியபுராணத்திலும் சேக்கிழார்,

**"சங்கொடு தாரை காளம் "** என்ற செய்யுளில் **"திமிலை" தட்டி பொங்கொலிச் சின்னமெல்லாம்** என்று இடம்பெறுகிறது.

அருணகிரிநாதரும் தன்னுடைய திருப்புகழில் பல இடங்களில் '**திமிலை'** பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

கோயில் சிற்பங்களில் திமிலை வாசிக்கும் சிற்பங்கள் பல காணப்படுகின்றன.

**உடுக்கை :**

சிவபெருமானின் கையில் இருக்கும் ஒரு இசைக்கருவி ஆகும். இக்கருவி இடைக் குறுகியும் , இரு பக்கங்கள் விரிந்தும் காணப்படுகின்றன. இது சிறிய தோற்கருவி ஆகும். இக்கருவி இரண்டு கை விரல்களால் இசைக்கப்படுகிறது.

**இந்தளம் :**

தட்டு வடிவில் அமைந்த இக்கருவி இரு கைகளில் பொருத்தி தாளத்திற்காக இசைக்கப்படுகிறது.

**மத்தளம் :**

பஞ்சவாத்யத்தில் முக்கியமாக இடம்பெறுவது மத்தளம் என்ற இசைக்கருவி ஆகும். மத்தளம் என்ற சொல் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்தே இருந்துள்ளது. மத்தளமானது ஆரம்ப காலத்தில் கோயில்களில் மட்டுமே வாசிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு **உத்தமகருவி** என்று பெயர். பிற்காலத்தில் சமக்கருவியாக மாறியுள்ளது. அதாவது கோயில்களில் மட்டுமன்றி பொதுவான இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

மத்தளம் வாசிக்கப்பட்டு கோயில்களில் பாடப்பட்டு வந்த தமிழிசைப் பாடல்களே கர்நாடக இசையின் ஆதி மரபாக இருக்கலாம் என்று தோன்றுகின்றது. இதற்கு உதாரணமாக கி.பி 5 ஆம் நூற்றாண்டிலேயே காரைக்கல் அம்மையார் இறைவனைத் துதித்துப் பாடிய பாடல்களைக் கூறலாம். இவர்தம் பாடல்களில் இசையின் இலக்கண முறைகளை குறிப்பிடுவதோடு மத்தளத்தினைப் பற்றிய செய்தியையும் தருகிறார். அதற்குச் சான்றாக இவரின் திருவாலாங்காட்டு மூத்த திருப்பதிகத்தினை இங்கு பார்க்கலாம்.

(உ.ம்) துத்தங் கைக்கிளை விளரிதாரம் உழை
இளி ஓசை பண்கெடுமப் பாடிச் சச்சரி

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கொக்கரை, தக்கையொடு தகுணிச்சம்

துந்துபி, தாளம் வீணை மத்தளம்……

இதைத் தொடர்ந்து திவ்யப் பிரபந்த காலத்திலும் தண்ணும்மையை அனுசரித்து மத்தளம் வாசிக்கப்பட்டுள்ளதைப் பற்றிய குறிப்புகள் கானப்படுகின்றன.

"ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி

யாழ் குழல் முழவ மோடிசை திசை…"

என்ற திருப்பள்ளி எழுச்சிப் பாடல் வரிகள் மூலம் அறிய முடிகின்றது.

இதைத் தொடர்ந்து

**'மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத '** என்ற ஆண்டாள் பாடல் மூலம் அறியமுடிகிறது. இவ்வாறு கூறப்படும் மத்தளமானது கேரளாவில் கோவில் உற்சவங்களில் வாசிக்கப்படும் பஞ்சவாத்யங்களில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இது பலா மரத்தால் செய்யப்பட்ட கனமான கருவி ஆகும். இதனுடைய அமைப்பு நடுவில் பெருத்தும், இரு பக்கங்கள் குறுகியும் காணப்படுகிறது. ஆனால் இரு பக்கங்களிலும் வெவ்வேறு ஒலிகளைக் கேட்கமுடியும். இக்கருவியை வாசிக்கும் கலைஞர்கள் கச்சேரியின் தாளத்தைக் கட்டுக்குள் வைத்துக் கொண்டு போகிறார். வாசிப்பவர் மத்தளத்தை கழுத்தில் மாட்டிக்கொண்டு வாசிப்பர். கதகளி, கேளி இசைக்குழுவில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

**மத்தள வாத்தியக் கலைஞர்கள்;**

1. கலாமண்டலம் ஹரிஹரன்
2. திரு.கே.சங்கர வாரியார்
3. திரு.கலாமண்டலம் அச்சுத வாரியார்

**க்ஷேத்திரங்கள் :**

பஞ்சவாத்யங்கள் சிவாலயங்கள் , ஐயப்பன் கோயில்களில் மற்றும் விஷ்ணு ஸ்தலங்களிலும் மேலும் சக்தி கோயில்களிலும் வாசிக்கப்படுகிறது.

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் ஆகிய தென் மாநிலங்களிலும் , மஹாராஷ்டிரா, குஜராத் போன்ற வட மாநிலங்களிலும் கோயில்களில் பஞ்சவாத்யங்கள் வாசிக்கப்படுகின்றன.

இவ்வாத்யங்கள் வாசிக்கும் கலைஞர்கள் தங்களது கலையை இறைவனுக்குச் செலுத்தும் காணிக்கையாகக் கருதுகின்றனர்.

**முடிவுரை :**

- ஸ்ருதி (மாதா), லயம் (பிதா) இவை இரண்டும் சேர்ந்தால் தான்

ஒரு இசைக்கச்சேரி முழுமை அடைகிறது.

- இசை வாத்தியங்களில் அதிலும் தாள வாத்தியங்கள் கச்சேரிகளில் முக்கிய பங்கு வகிக்கின்றது.
- அப்படிப்பட்ட தாள வாத்தியங்கள் சேர்ந்து பஞ்சவாத்தியமாக

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கேட்கும் பொழுது மிகவும் நேர்த்தியாகக் காணப்படுகிறது. திருவிதாங்கூர் அரண்மனை ஏடுகளில் 64 கலைகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் பஞ்சவாத்யத்தின் முக்கியத்துவம் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சவாத்யங்களின் ஒலி நயங்கள் மற்றும் தாள லயங்கள் நம் உள்ளத்தை நெகிழச் செய்து இன்பமளிக்கிறது.

**துணை நூற்பட்டியல்**


- Kerala Culture.org
- Wikipedia- பஞ்சவாத்தியம்
- Cinema Vikadan
- பஞ்சவாத்யம் – கேரளாவின் பாரம்பரிய இசைக்குழு
- லயவாத்யம் – கர்நாடக இசையில் மிருதங்கம்